**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW8 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 18.09.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.செந்தமிழன் | Father Name | : | திரு.ராமசந்திரன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் சூளகரை கிராமத்தில் வசிக்கிறேன் . M.Sc. B.Ed படித்துள்ளேன். தற்போது Shoe கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன் . சுமார் 4 வருடங்களுடக்கு முன்பாக ஒரு நாள் மாலை நேரத்தில் சூளகரை பஸ் டாப் அருகே வந்துக்கொண்டிருந்தேன் . அப்போது மாலை 6.00-7.00 மணி இருக்கும். அப்போது பஸ் டாபில் உள்ள அம்பேத்கர் சிலை அருகே கூட்டாக இருந்தார்கள், நான் என்னவென்று கேட்தற்கு கேசவனுக்கு அடிப்பட்டுவிட்டதாக சொன்னார்கள், எப்படி அடிப்பட்டது என்பதை நான் கேட்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் அதன்பிறகு கேசவனின் மகள் அன்பு நிலாவிடம் அவருடைய அப்பாவிற்கு அடிப்பட்ட விவரத்தை சொன்னேன். அன்பு நிலாவின் வீடும் சூளக்கரையில் தான் இருக்கிறது. கேசவனுக்கு உடம்பில் எந்த இடத்தில் அடிப்பட்டது என்பதை நான் பார்க்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :—**

போலீஸ் விசாரணையின் போது கடந்த 20.10.2021 அன்று மாலை 6.30 அளவில் சூளக்கரை பஸ் டாப் அருகே உள்ள அப்பேத்கர் சிலை அருகே கேசவன் என்பவரிடம் தம்பி துரை (எ) அறிவு பீடி கேட்டு தகராறு செய்து கொண்டு இருந்தார் என்றும் , நான் இந்த தகவலை அவர் மகள் அன்பு நிலாவிடம் சென்னேன் என்றும் , அன்பு நிலாவும் , அவர் கணவரும் காரில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும் , அப்போது வாய் தகராறு ஏற்பட்டது என்றும் , தம்பிதுரை (எ) அறிவு கேசவனின் கன்னத்தில் மாறி மாறி கையால் அடித்து , கையில் இருந்த இரும்பு வளையத்தை கழற்றி கேசவனின் வலது கண்ணிற்கு கீழே , வலது கன்னத்தில் குத்தியதால் காயம்பட்டு கீழே விழுந்த கேசவனின் நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்து தம்பி துரை கையால் குத்தியதால் மூச்சு பேச்சு இல்லாமல் விழுந்துவிட்டார் என்றும் , அவரை போச்சம்பள்ளி மருத்துவனைக்கு இரவு 7.10 மணிக்கு அழைத்து சென்ற போது டாக்டர் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு இறந்துவிட்டார் என்று தகவல் சொன்னார் என்றும் , இது சம்பந்தமாக அன்பு நிலா கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி கேசவன் அடிப்பட்ட விரத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN